RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 99 ஏப்ரல்.16 2026 வியாழக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# கஞ்சா போதையில் கல்லூரி மாணவியிடம் பாலியல் அத்துமீறல்: எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சென்னை, ஏப்.16-

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் அருகே வீட்டில் தனியாக இருந்த கல்லூரி மாணவியை குறிவைத்து கஞ்சா போதையில் இருந்த இளைஞர்கள் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு, பாதிக்கபட்ட மாணவி மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியதில் மாணவி உயிருக்கு போராடி வருவதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

இந்த கொடூரக் குற்றத்தில் ஈடுபட்ட அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறை அதிகாரிகளை வலியுறுத்திக்



கேட்டுக்கொள்கிறேன். கஞ்சா போதை, பாலியல் வன்கொடுமை, கொலை முயற்சி, இது தான் திமுக ஆட்சிக்காலம். படிக்கும் கனவுகளோடு இருந்த மாணவியை, ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராட வைத்திருப்பது தான் ஸ்டாலின் மாடல்.

இந்த மாடல் தான் மீண்டும் வரவேண்டும் என்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் துடித்துக்கொண்டு இருக்கிறார். நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன் இத்தனை நாட்கள் தேர்தல் பிரசாரம் செய்த மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறி ஆகியுள்ளதை பற்றி ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை பேசினாரா?.

தன் ஆட்சிக்கான Accountability இல்லாத, என்ன நடக்கிறது என்று Ideaவே இல்லாத ஒரு Dummy முதல்அமைச்சர் தமிழ்நாட்டை ஆண்டது போதும். ஏப்ரல் 23 அன்று நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான கேள்வி ஒன்று ஒன்று தான் தமிழகம் வாழ வேண்டுமா? ஆம் என்றால், திமுக வீழ்ந்தே ஆகவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு கிடைப்பதை தடுக்க ஸ்டாலின் முயற்சி: தமிழக பாஜக

சென்னை: ஏப்.16-

பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு கிடைப்பதை தடுக்கவே முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை, மிரட்டல் விடுத்திருக்கிறார் என்று தமிழக பாஜக குற்றம்சாட்டியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சி சார்பில் மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: “தமிழ்நாடே ஸ்தம்பிக்கும். நாங்கள் இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்து விடுவோம்..” நீங்கள் இதை மிரட்டல் என்று நினைத்தாலும் எங்களுக்கு கவலையில்லை. பிரதமர் மோடிக்கு தமிழ்நாட்டில் இருந்து விடுக்கப்படும் இறுதி எச்சரிக்கை இது.

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்றும் 50, 60களில் பார்த்த பழைய திமுகவையும் இந்தியா மீண்டும் பார்க்க வேண்டி இருக்கும் என்று இந்திய இறையாண்மைக்கு எதிராக, தேச ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில், பிரிவினைவாதத்தை தூண்டும் வகையில் முதல்வர் ஸ்டாலின் பேசிய பேச்சு இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிரானது.

திமுக 50களில் ‘திராவிட நாடு’ கொள்கை, உள்ளடக்கிய தனி சுதந்திர நாட்டை வலியுறுத்திய பிரிவினைவாத ஒழுக்கத்தை மொழியடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்ட சூழலில், 1962ல் சீன ஆக்கிரமிப்புக்குப் பின், அரசியல் சூழ்நிலை காரணமாக அண்ணா இக்கோரிக்கையை முறையாகக் கைவிட்டு தேசியத்தின் பக்கம் நின்றார். இப்பொழுது பிரிவினைவாத திமுகவின், திராவிட மாடல் முதல்வர் தேர்தல் வாக்கு வங்கி அரசியலுக்காக தமிழகத்தை தலை குனிய வைக்கும் வகையில் இந்திய தாய் திருநாட்டை அவமதிக்கும் வகையில் பேசிய தேச விரோத பேச்சு மன்னிக்க முடியாதது.

தேர்தல் பயத்தில் வாக்கு வங்கி அரசியலுக்காக, மொழி, ஜாதி, மத, இன வேற்றுமைகளை உருவாக்கும் வகையில், வகுப்புவாத, பிரிவினைவாதம் அரசியல் பேசி வந்த முதல்வர் ஸ்டாலின் தற்பொழுது பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு அளித்து பெண்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை வளர்ச்சியை முன்னேற்றத்தை அளிக்க முயற்சிக்கும் பிரதமர் மோடிக்கு, எச்சரிக்கை விடுத்து பெண்களுக்கு எதிராக, பெண் உரிமையை சிதைக்கும் வகையிலும், அதை திசை திருப்பும் வகையிலும் செயல்படுவதை தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள பெண்களும் மன்னிக்க மாட்டார்கள்.

தமிழ், தமிழர், தமிழகத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் 14 லட்சம் கோடி திட்டங்கள் தந்து தமிழகத்தை வளர்ச்சி பாதையில் அழைத்துச் சென்ற பிரதமர் மோடியை தேர்தலுக்காக, இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிராக, எச்சரிக்கை, மிரட்டல் விடுத்து, மத்திய, மாநில அரசுகளின் மேன்மையான உறவை இழிவுபடுத்தும் வகையில், அரசியல் நாகரிகத்தையும் இந்திய இறையாண்மையும் குழி தோண்டி புதைத்து விட்டார்.

தமிழகத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் தொகுதி மறுவரையறை செய்தால் ஒட்டுமொத்த தமிழகமும் ஸ்தம்பிக்கும் அளவுக்கு போராட்டம் நடத்துவோம். ஒவ்வொரு குடும்பமும் தெருவில் இறங்கி போராடும் என முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம், மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 இட ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்துவதற்காக, மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. அதற்காக வரும் 16ம் தேதி முதல் மூன்று நாட்களுக்கு நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடர் நடக்கவுள்ளது.

மத்திய அரசை எதிரியாக காட்டி தமிழக மக்களை ஏமாற்றி இந்த சட்டப்பேரவைத் தேர்தலில் வென்று விடலாம் என்ற நினைப்பில் மத்திய அரசு மீது அவதூறுகளை அள்ளி வீசியுள்ளார் முதல்வர் ஸ்டாலின். தமிழகத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் தொகுதி மறுவரையறை செய்யப்படும் என ஏற்கனவே பிரதமர் மோடி உறுதி அளித்துள்ளார். அதன் பிறகு போராடுவோம், இறுதி எச்சரிக்கை எனப்பேசி மக்களிடம் பதற்றத்தை ஏற்படுத்த ஸ்டாலின் திட்டமிடுகிறார்.

கடந்த 2024 மக்களவைத் தேர்தலின்போது பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அரசியல் சட்டத்தை மாற்றி விடுவார்கள் என திமுக, காங்கிரஸ் கட்சியினர் பிரச்சாரம் செய்தனர். அதுபோல இப்போது தொகுதி மறுவரையறையை வைத்து மக்களை ஏமாற்றி விடலாம் என ஸ்டாலின் நினைக்கிறார்.

ஆனால், தமிழக மக்களை அவர் ஒருபோதும் முட்டாளாக்க முடியாது. பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வருவதை தடுக்க, வழக்கமான பிரிவினைவாத சதியை ஸ்டாலின் கையில் எடுத்திருக்கிறார். யார் எதை எடுத்தாலும், எத்தனை மிரட்டல்கள் விடுத்தாலும் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தே தீரும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 'பாஜகவை கால்ஊன்ற விடக்கூடாது' இளையான்குடி தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகன்னப்பன் வலியுறுத்தல்



மானாமதுரை ஏப்.16-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி திமுக வேட்பாளர் தமிழரசியை ஆதரித்து இளையான்குடி அருகே உள்ள முனைவென்றி, சின்ன புதுக்கோட்டை, மானாமதுரை, கொன்னக்குளம், செய்களத்தூர், வன்னிக் குடி, கரிசல்குளம் உள்ளிட்ட பகுதிகளில் முதுகுளத்தூர் திமுக சட்டமன்ற வேட்பாளர் ராஜ கண்ணப்பன் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது: வளர்ச்சிப் பாதை: முதல்வர் மு.க. ஸ்டாலின் அனைத்து சமூக மக்களையும் மதிக்கக்கூடியவர். அவர் தமிழகத்தின் பொருளாதாரத்தை இரட்டை இலக்கத்திற்கு உயர்த்தி, மாநிலத்தை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

மத்திய அரசு மீதான விமர்சனம்: பிரதமர் மோடி தமிழகத்திற்கு அடிக்கடி வருவார், ஆனால் மாநிலத்திற்கு அவரால் எந்தப் பயனும் இல்லை. நமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பாஜகவை தமிழகத்தில் கால்ஊன்ற விடக்கூடாது.

அரசியல் விமர்சனம்: மு.க. ஸ்டாலின் மீண்டும் முதல்வராக வந்தால்தான் தமிழகத்திற்கு விடிவுகாலம் பிறக்கும். நான் அமைச்சராக இருந்தபோது ஒரு மூலையில் நின்று ஒப்பந்த வேலை கேட்டவர்தான் பழனிசாமி. தற்போது அவரை வைத்து அதிமுகவை நடத்துகின்றனர். அந்த நிலையில்தான் அதிமுக இன்று உள்ளது.

திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைவது உறுதி என அவர் தனது உரையில் குறிப்பிட்டார். இந்தப் பிரச்சாரத்தின் போது முன்னாள் எம்.எல்.ஏ மதியரசன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# காரைக்குடியில் பரபரப்பு: தவெக தபால் வாக்கை காங்கிரஸிற்கு மாற்றியதாகப் புகார்; வேட்பாளர் மறியல்



தேவகோட்டை ஏப்.16-
சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தபால் வாக்குகளைத் தமிழக வெற்றிக் கழகத்திற்கு (தவெக) பதிலாகக் காங்கிரஸிற்கு வலுக்கட்டாயமாகச் செலுத்த வைத்ததாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, தேர்தல் அதிகாரியைக் கண்டித்துத் தேவகோட்டையில் மறியல் போராட்டம் நேற்று நடைபெற்றதுசம்பவத்தின் பின்னணிகாரைக்குடி காலவாப்பொட்டல் அருகே வசிக்கும் தோழர் ஜீவானந்தம் தெருவைச் சேர்ந்த ராஜாமணி (90) மற்றும் அவரது மனைவி சீதையம்மாள் (86) ஆகியோரிடம் தபால் வாக்கு பெறுவதற்காகத் தேர்தல் அதிகாரிகள் சென்றுள்ளனர். அப்போது அங்குள்ள குடும்பத்தினரை வெளியேறச் சொல்லிவிட்டு அதிகாரிகள் தபால் வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

முதியோரின் பேரன் மற்றும் மருமகள் கவிதா ஆகியோர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். "தங்கள் மாமனார், மாமியார் தவெக வேட்பாளர் பிரபுவிற்கு வாக்களிக்க விரும்பிய நிலையில், அதிகாரிகள் அவர்களைக் கட்டாயப்படுத்தி காங்கிரஸ் வேட்பாளருக்கு வாக்களிக்க வைத்துவிட்டனர்" என்று கவிதா குற்றம் சாட்டியுள்ளார்.சாலை மறியல் மற்றும் போராட்டம்இந்தத் தகவல் அறிந்ததும் தவெக வேட்பாளர் பிரபு தலைமையில் அக்கட்சி யினர் மற்றும் முதியோரின் குடும்பத்தினர் தேவகோட்டை சார் ஆட்சியர் அலுவலகத்திற்குப் புகார் அளிக்கச் சென்றனர். அங்குத் தேர்தல் நடத்தும் அலுவலர் இல்லாததால், ஆத்திரமடைந்த அவர்கள் காரைக்குடி தேவகோட்டை நெடுஞ் சாலையில் ராம்நகர் பகுதியில் மறியலில் ஈடுபட்டனர்.இதனால் ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த தேர்தல் நடத்தும் அலுவலர், உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

தவெக தரப்பு குற்றச்சாட்டு"தபால் வாக்கு பெறச் செல்லும் போது அனைத்து வேட்பாளர்களின் முகவர்களையும் அழைத்துச் செல்ல வேண்டும். ஆனால் அதிகாரிகள் காங்கிரஸ் முகவரை மட்டும் அழைத்துச் சென்று, மற்றவர்களைத் தவிர்க்கின்றனர். இது பெரும் முறைகேடு, தேர்தல் ஆணையம் இதனை விசாரிக்க வேண்டும்" எனத் தமிழக வெற்றிக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். அதிகாரிகளின் விளக்கம் இது குறித்துத் தேர்தல் நடத்தும் அலுவலர் ஆயுஷ் வெங்கட் வாட்ஸ் கூறுகையில்:"விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ஒருவேளைத் தவறு நடந்திருப்பது உறுதி செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணி இடைநீக்கம் செய்யப்படுவர்."

# விபத்துகளைக் குறைக்க கம்பம் போக்குவரத்து காவல்துறை அதிரடி நடவடிக்கை!




தேனி ஏப்.16-
தேனி மாவட்டத்தில் விபத்துகளைக் குறைக்கவும், போக்குவரத்துப் பாதுகாப்பை உறுதி செய்யவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சினேகபிரியா உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில், கம்பம் போக்குவரத்து காவல் நிலையப் பகுதிகளில் பல்வேறு விபத்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உத்தமபாளையம் உட்கோட்டத்திற்கு உட்பட்ட கம்பம், உத்தமபாளையம், கூடலூர் மற்றும் குமுளி ஆகிய பகுதிகளில் விபத்துகள் அதிகம் நடைபெறும் இடங்கள் (Black Spots) கண்டறியப்பட்டன. இந்தப் பகுதிகளில் வாகன ஓட்டிகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சினேகபிரியா உத்தரவின் பேரில்கம்பம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் அ.தங்கமணி முன்னிலையில் பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புப் பணிகள்: இரவு நேரங்களில் வாகன ஓட்டிகளுக்குத் தெளிவாகத் தெரியும் வகையில் சூரிய ஒளியில் இயங்கும் மின்விளக்குகள் (Solar Blinker Lights) பொருத்தப்பட்டுள்ளன. சாலை ஓரங்களை அடையாளம் காட்டும் சோலார் டெலினியேட்டர்கள் (Solar Delineators) அமைக்கப்பட்டன. வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் ஆங்காங்கே இரும்பு தடுப்பான்கள் (Barricades) வைக்கப்பட்டுள்ளன. காவல்துறையினரின் இந்தத் துரித நடவடிக்கை யினால், மலைச்சாலையை ஒட்டியுள்ள இந்தப் பகுதிகளில் விபத்துகள் பெருமளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. காவல்துறையினரின் இந்தச் சீரிய முயற்சியை அப்பகுதி பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் பாராட்டி வருகின்றனர்.



# சிவகங்கையருகே பொன் ஏர் விடுதல் நிகழ்ச்சி. சிவகங்கை வேட்பாளர் கருணாஸ் பங்கேற்பு

காளையார் கோவில் ஏப்.16-
சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வடக்கு ஒன்றியம் அல்லூர் பனங்காடி அருகேயுள்ள வீராணி எனும் கிராமத்தில் ஆண்டாண்டு காலமாக தொடர்ந்து நடைபெற்று வரும் பொன் ஏர் விடுதல் நடைபெறுவது வழக்கம்...

சித்திரை முதல் நாளில் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் போற்றும் விவசாயத்தை எவ்வித இடையூறுகளும் இல்லாது விவசாய நிலங்கள் மற்றும் கால்நடைகளை போற்றி வணங்கி அன்றைய தினம் வயல்களில் ஏர் கலப்பை கொண்டு காளைகளை வைத்து உழுது பண்படுத்துவதையே பொன் ஏர் விடுதல் என்பதாகும் ...

இந்த நிகழ்ச்சியை சிறப்பு விருந்தினராக சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளரும். முக்குலத்தோர் புலிப்படை கட்சி நிறுவனர் தலைவருமான சேது. கருணாஸ் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். காளையார்கோவில் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.எம். கென்னடி முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் . காங்கிரஸ் வட்டார தலைவர்களான மதியழகன். கரும்பாவூர் உடையார்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் காங்கிரஸ் சோலை .செந்தில்வேல் ,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கிங் கார்த்திக். வழக்கறிஞர்களான வேலூர் காட்டு ராஜா . காளையார்கோவில் வடக்கு ஒன்றிய வழக்கறிஞரணி அமைப்பாளர் வீராணி சதீஷ்குமார் . நாட்டரசன் கோட்டை பேரூர் இளைஞரணி அமைப்பாளர் கவுன்சிலர் மோகன்ராஜ். மாவட்ட துணைச் செயலாளர் செல்லப்பாண்டி. இளைஞரணி துணை அமைப்பாளர் கர்ண. அருண்குமார் .வீராணி பூமிநாதன் . விஜயமாணிக்கம் பூமி . பனங்காடி அரிய முத்து . வீராணி இளைஞரணி நிர்வாகிகளான ராமன் . லெட்சுமணன் . வெங்கடாசலபதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# சிவகங்கையில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் விழா

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வீரவணக்கம்

சிவகங்கை ஏப்.16-
இந்தியாவின் சட்ட மேதை புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு, சிவகங்கையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் (ஏப்ரல் 14) எழுச்சியுடன் மரியாதை செலுத்தப்பட்டது.சிவகங்கையில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் உருவச்சிலைக்கு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மானாமதுரை தொகுதி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வே.பாலையா தலைமையில் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வின் சிறப்பம்சங்கள்: மாலை அணிவித்தல்: சமத்துவப் போராட்டத்தின் அடையாளமான அம்பேத்கர் சிலைக்கு கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் புடைசூழ மாலை அணிவிக்கப்பட்டது. உறுதிமொழி ஏற்பு: அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு, சாதி வேற்றுமைகளற்ற சமத்துவச் சமுதாயத்தைப் படைக்க உறுதிபூணும் "அனைத்துலக சமத்துவநாள்"உறுதிமொழி அனைவராலும் ஏற்கப்பட்டது. பங்கேற்பு: இந்நிகழ்வில் கட்சியின் மாவட்ட, தொகுதி மற்றும் கிளை நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு "ஜெய் பீம்" முழக்கங்களுடன் அம்பேத்கரின் புகழைப் போற்றினர்.

இந்நிகழ்வு சிவகங்கை மற்றும் மானாமதுரை தொகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினரிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.



# பாடியநல்லூர் ஸ்ரீ முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி ஆலயத்தில் பங்குனி உத்திர தீமிதி திருவிழா

மாதவரம், ஏப்.16-
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் கிராமம் பர்மா நகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி ஆலயத்தில் 61ம் ஆண்டு பங்குனி உத்திர தீமிதி திருவிழா மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் தலைமையில் கணபதி ஹோமம், துர்கா ஹோமத்துடன் காப்புகட்டுதல் கடந்த 132026ம் தேதி அன்று கொடியேற்றத்துடன் வெகு சிறப்பாக தொடங்கியது. பின்னர் ஆலமரம் ஸ்ரீமுனீஸ்வரர் ஆலயத்திலிருந்து சுமார் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் விரதம் இருந்து கங்கைநீர் மற்றும் பால்குடம் தங்கள் சிரசியில் சுமந்தப்படி பாடியநல்லூர் கிராமத்தில் உள்ள முக்கிய வீதிகள் வழியாக ஆலயத்திடலை வந்தடைந்து அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து வழிப்பட்டனர். இதனைத்தொடர்ந்து ஒவ்வொருநாளும் நற்பணி மன்றங்கள் மற்றும் சுற்றுவட்டார மக்கள் உபயமாக இன்னிசை கச்சேரிகள், இலவச குளிர்பானங்கள் வழங்கப்பட்டது.பின்னர் இறுதி நாளான 1242026ம் தேதி விழாவிற்குஆலய நிர்வாகிகள் பூக்குழிக்கு சிறப்பு பூஜைகள் செய்து தீமிதி திருவிழாவை துவக்கி வைத்தனர். பின்னர் சுமார் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் உட்பட காப்புகட்டிய பக்தர்கள் அக்கினி குண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவை ஆலய அறங்காவலர் மீ.வே. கருணாகரன் மற்றும் கருணாகரன், வீரம்மாள், ஞானம், ராமு ஆலய விழா குழு நிர்வாகிகள் தலைவர் புண்யசேகர், செயலாளர் சன்முனியாண்டி, பொருலாளர் ஞானப்பா உள்ளிட்ட கிராம பொதுமக்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கினர்.

# மானாமதுரை தொகுதியில் தவெக வேட்பாளர் D.இளங்கோவனுக்கு ஆதரவாகத் தீவிர வாக்கு சேகரிப்பு

## முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து ஆதரவு



திருப்புவனம் ஏப்.16-
தமிழக சட்டமன்றத் தேர்தலை 2026 முன்னிட்டு சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் தேர்தல் பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, திருப்புவனம் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பாகத் தொகுதியின் பல்வேறு பகுதிகளில் முக்கியப் பிரமுகர்கள் மற்றும் தொழிலதிபர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டும் பணி நடைபெற்றது.முக்கிய சந்திப்புகள்தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் தளபதி விஜய் அவர்களின் ஆசியுடன், மானாமதுரை சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள D.இளங்கோவன் ஆதரவாகத் திருப்புவனம் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் நேற்று களப்பணியில் ஈடுபட்டனர்.சுற்று வட்டாரப் பகுதிகளில் செல்வாக்கு மிக்க முக்கியப் பிரமுகர்களான:

அஞ்சூர் நாடு ஏனாதி நாட்டாமை சௌந்தரபான்டி பெத்தானேந்தல் நாட்டாமைஆகியோரை நிர்வாகிகள் நேரில் சந்தித்துப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இந்தச் சந்திப்பின் போது, தொகுதியின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைகளை எடுத்துரைத்து, வரும் தேர்தலில் 'விசில்' சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டனர்.மக்களிடையே எழுச்சி வேட்பாளர் D. இளங்கோவனின் வெற்றிக்காக ஒன்றியம் முழுவதும் வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வரும் நிர்வாகிகள், மாற்றத்தை விரும்புவோர் அனைவரும் தவெகவிற்குத் தங்களது பேராதரவை வழங்க வேண்டும் எனத் தொழிலதிபர்களிடமும், சமூகப் பெரியோர்களிடமும் வலியுறுத்தினர்.சந்திப்பின் போது நாட்டாமை மற்றும் முக்கியப் பிரமுகர்கள் தவெக நிர்வாகிகளுக்கு இன்முகத்துடன் வரவேற்பு அளித்து, தேர்தல் வெற்றிக்குத் தங்களது வாழ்த்துகளைத் தெரி வித்தனர். இந்த நிகழ்வில் திருப்புவனம் கிழக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை: மாவட்ட ஆட்சியர் பொற்கொடி தலைமையில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சார வாகனம்




சிவகங்கை ஏப்.16-
தமிழகத்தில் வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, சிவகங்கை மாவட்ட நிர்வாகம் சார்பில் பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் சிறப்பு விழிப்புணர்வு பிரச்சார வாகனம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முக்கிய அம்சங்கள்:

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பொற்கொடி அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த வாகனம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள முக்கியத் தகவல்கள்: தேர்தல் தேதி: சிவகங்கை மாவட்டத்தில் 2304 2026 அன்று தேர்தல் நடைபெறவுள்ளது. நேர்மையான வாக்கு: "பணத்திற்கோ அல்லது பரி பொருட்களுக்கோ ஆசைப்படாமல் நேர்மையாக வாக்களிக்க வேண்டும்" (Say No to Cash & Gifts) என்பதை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு வாசகங்கள் ஒட்டப்பட்டுள்ளன. 100% வாக்குப்பதிவு: "100% நேர்மையாக வாக்களிப்போம்", "யாரும் விடுபடக்கூடாது" (No Voter to be left behind) போன்ற முழக்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. உதவி எண்கள்: தேர்தல் தொடர்பான சந்தேகங்களுக்கு 1950 என்ற உதவி எண்ணையும், விதிமீறல் புகார்களுக்கு cVIGIL செயலியைப் பயன்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனமான து சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து முக்கிய இடங்களுக்கும் சென்று, மக்களிடையே "என் வாக்கு விற்பனைக்கு அல்ல" என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

# மதத்தை முன்வைத்து வாக்கு வேட்டை?" திருப்பரங்குன்றத்தில் அதிமுக வேட்பாளர் மீது கடும் புகார்



மதுரை,ஏப்.16-
திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளர் வி.வி. ராஜன் செல்லப்பா, மத உணர்வுகளை தூண்டும் வகையில் தேர்தல் பிரச்சாரம் நடத்தியதாக போலீசில் பரபரப்பு புகார் அளிக்கப்பட்டுள்ளது. மதுரை நகர காவல் ஆணையருக்கு திமுக சட்ட ஒருங்கிணைப்பாளரும் வழக்கறிஞருமான அ. நாகேந்திரன் அளித்த மனுவில், திருப்பரங்குன்றம் மலைப்பகுதியில் "தீபம் ஏற்றுவேன்" என பொதுமக்களிடம் உறுதி அளித்து, அதனை முன்னிறுத்தி வாக்கு சேகரித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள (sub judice) பிரச்சினை என்பதையும், அதனை தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்துவது சட்டவிரோதம் மட்டுமல்லாமல் நீதிமன்ற செயல்முறைகளில் தலையீடாகவும் அமைகிறது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.மேலும், இத்தகைய பேச்சுகள் மத உணர்வுகளை தூண்டும் தன்மை கொண்டதாகவும், வாக்காளர்களின் மனநிலையை பாதிக்கும் வகையில் உள்ளதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி மதம், மதச் சின்னங்கள் அல்லது உணர்வுகளை தேர்தல் ஆதாயத்திற்கு பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் வலியுறுத் தப்பட்டுள் ளது.சம்பந்தப்பட்ட பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாக பரவி, பெருமளவு வாக்காளர்களை தாக்கம் செய்யும் முயற்சி நடந்துள்ளதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியான இந்த கருத்துகள் சூழ்நிலையை தீவிரப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951ன் பிரிவு 123ன் கீழ் இது "ஊழல் நடைமுறை" எனக் கருதப்பட வேண்டும் என்றும், பாரதிய ந்யாய சன்ஹிதா சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழும் குற்றமாகும் என்றும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் தேர்தல் சூழல் பாதிக்கப்படுவதோடு, சமூக ஒற்றுமைக்கும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே உடனடி விசாரணை நடத்தி, சமூக வலைதளங்களில் இருந்து தொடர்புடைய வீடியோக்களை நீக்கி, உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்ய போலீசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மானாமதுரை ஆனந்தவல்லி அம்பாள் சோமநாத சுவாமி திருக்கோயில் சித்திரை திருவிழா: ஏப்ரல் 20ல் தொடக்கம்!

மானாமதுரை: ஏப்.16-
சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்திற்கு உட்பட்ட மானாமதுரை அருள்மிகு ஆனந்தவல்லி அம்பாள் சமேத சோமநாத சுவாமி திருக்கோயிலின் 1435ம் பசலி, 2026ம் ஆண்டு சித்திரை திருவிழா (சைத்ரோத்சவம்) வரும் ஏப்ரல் 20ஆம் தேதி கோலாகலமாகத் தொடங்க உள்ளது.முக்கிய நிகழ்வுகள்:வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள இத்திருக்கோயிலில், ஏப்ரல் 20 முதல் மே 1 வரை பத்து நாட்களுக்கு மேலாக பல்வேறு சிறப்பு வழிபாடுகள் நடைபெற உள்ளன.

கொடியேற்றம்: ஏப்ரல் 21ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 7:25 மணி முதல் 9:00 மணிக்குள் ரிஷப லக்னத்தில் திருவிழா கொடியேற்றத்துடன் முறைப்படி தொடங்குகிறது. திருக்கல்யாணம்:விழாவின் முக்கிய நிகழ்வான அம்பாள் சுவாமி திருக்கல்யாண வைபவம் ஏப்ரல் 28 ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 10:35 மணி முதல் 11:00 மணிக்குள் நடைபெறுகிறது. தேரோட்டம்: ஏப்ரல் 29 ஆம் தேதி (புதன்கிழமை) மாலை பிரதோஷ நேரத்தில் "தேர் தடம் பார்த்தல்" நிகழ்வும், அதனைத் தொடர்ந்து தேரோட்டமும் நடைபெறும். தீர்த்தவாரி: ஏப்ரல் 30ஆம் தேதி (வியாழக்கிழமை) தீர்த்தோற்சவம் மற்றும் கும்பபிஷேகம் நடைபெற்று விழா நிறைவு பெறுகிறது. வைகை ஆற்றில் அழகர் இறங்குதல்:திருவிழாவின் சிகர நிகழ்ச்சியாக, மே 1ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) வைகையாற்றில் அழகர் இறங்கும் வைபவம் நடைபெற உள்ளது.### விழா அட்டவணை:| தேதி | முக்கிய நிகழ்வு / வாகனம் ||||
| 20.04.2026 | அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, வாஸ்து சாந்தி |
| 21.042026 | கொடியேற்றம், இரவு கற்பக விருட்சம் - சிம்ம வாகனம் |
| 22.04.2026 | பூத வாகனம் - அன்ன வாகனம் |
| 23.04.2026 | கைலாச வாகனம் - கமல வாகனம் |
| 24.04.2026 | யானை வாகனம் - கிளி வாகனம் |
| 25.04.2026 | இரண்டு குதிரை வாகனங்கள் |
| 26.04.2026 | இரண்டு ரிஷப வாகனங்கள் |
| 27.04.2026 | நந்தி, காமதேனு வாகனம் |
| 28.04.2026 | திருக்கல்யாணம், புஷ்பப் பல்லக்கு |
| 29.04.2026 | திருத்தேர் வடம் பிடித்தல் |
| 30.04.2026 | தீர்த்தோற்சவம், வெள்ளி ரிஷப வாகனம் |
| 01.05.2026 | வைகையாற்றில் அழகர் இறங்குதல் |

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் ராணி சாகேபா மதுராந்தகி நாச்சியார் அவர்களின் வழிகாட்டலில், கோயில் நிர்வாகத்தினர் மற்றும் கிராமத்தினர் செய்து வருகின்றனர். பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



■ மதுரை மாவட்டம், திருப்பாலை யாதவா கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்காக நடைபெறும் தேர்தல் பணிகள் குறித்த இரண்டாம் பயிற்சி வகுப்பு நடைபெறுவதை மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., பார்வையிட்டார்.



■ அண்ணல் அம்பேத்கரின் 135வது பிறந்தநாளை முன்னிட்டு காரைக்குடியில் உள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு காரைக்குடி சட்டமன்றத் தொகுதி தவெக வேட்பாளர் டிகே பிரபு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மரிங்கிபட்டி ரமேஷ், கிட்டன் கிம் ஐயப்பன், தவெக தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# மானாமதுரை தொகுதியில் கப்பல் சின்னத்தில் சங்கர்கணேசன்

## தேர்தல் வாக்குறுதிகள் வெளியீடு




மானாமதுரை ஏப்.16-
2026 தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் சுயேச்சையாக கப்பல் சின்னத்தில் போட்டியிடும் சங்கர்கணேசன் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளார். இதில் கல்வி, வேலைவாய்ப்பு, உள்கட்டமைப்பு, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முக்கிய வாக்குறுதிகள் இடம்பெற்றுள்ளன. மூடப்பட்ட வீடியோகான் ஆலையை மீண்டும் திறந்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது, அரசு பள்ளிகளை மேம்படுத்துவது, விளையாட்டு மைதானம் மற்றும்கலை அரங்கம் அமைப்பது உள்ளிட்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், ரயில்வே மேம்பாலம் அமைத்து போக்குவரத்து நெரிசலை குறைப்பது, ரயில் நிலையத்தை நவீனப்படுத்துவது, புதிய பேருந்து நிலையங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை உருவாக்குவது ஆகியவையும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறையில் மருத்துவமனைகள் விரிவாக்கம், குடிநீர் பிரச்சினை தீர்வு, வைகை ஆற்றங்கரைகள் மேம்பாடு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார். பணத்திற்கு வாக்குகளை விற்காமல், எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும் என மக்களிடம் அவர் கேட்டுக்கொண்டார்.



■ குன்னூர் தாலுகா வெலிங்டன் கண்டோண்மெண்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் கிராமத்தில் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் வேட்பாளர் கே.எம்.ராஜூ தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார் .இதில் திமுக உறுப்பினர்கள் மற்றும் கூட்டணி கட்சி உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையாளர் கணக்கு (பொ)தங்கவேல் ராஜன் அவர்கள் தலைமையில் மைய அலுவலக வளாகத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.





# எழைய எருமைவெட்டி பாளையம் எடப்பாளையம் கிராமத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.16-
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனத்திற்கு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் ஒன்றிய குழு துணை பெருந்தலைவருமான மீ.வே.கருணாகரன் வழிகாட்டுதலின்படி சோழவரம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பழையஎருவெட்டிபாளையம் ஊராட்சி எடப்பாளையம் கிராமத்தில் எடப்பாளையம் 5வதுகிளை செயலாளரும் ஒன்றிய வர்த்தக அணி துணை அமைப்பாளருமான ராஜா மற்றும் திமுக நிர்வாகிகள் ஆனந்தன், ஏகநாதன், தனசேகர், சீனிவாசன், லட்சுமிபதி, முனி, கஜேந்திரன், சுப்பிரமணி, சரவணன் ,பத்மநாபன், பட்டாபிராமன்,யுவராஜ் ,நாகராஜ் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் இணைந்து அனைத்து வாக்காளர்களிடம் வீடு வீடாக சென்று திமுக செய்துள்ள சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களைவழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.

# செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 18 வார்டுகளில் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனம் தீவிர வாக்கு சேகரிப்பு




மாதவரம், ஏப்.16-
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனத்திற்கு செங்குன்றம் (நாரவாரிகுப்பம்) பேரூர் கழகம் சார்பில் பேரூர் பொறுப்பாளர் ஆர்.டி.சுதாகர் தலைமையில் செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளில் உள்ள வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். அப்போது பட்டாசு வெடித்து வேட்டாளருக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து ஆரத்தி எடுத்து இரு சக்கர வாகன பேரணி உள்ளிட்ட பிரம்மாண்டமாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெய்மதன், நாரவாரிக்குப்பம் பேரூராட்சி தலைவர் தமிழரசிகுமார், துணைத்தலைவர் விப்ரநாராயணன், முன்னாள் துணைத்தலைவர் பாபு, பேரூர் கழக அவைத்தலைவர் அருள்தேவநேசன், துணைச் செயலாளர்கள் சீனிவாசன், கபிலன், முனீஸ்வரி சுகுமார், பொருளாளர் சந்திரசேகர், மாவட்ட பிரதிநிதி சுரேந்தர், ஒன்றிய பிரதிநிதிகள் திராவிடமணி, அன்பு, இளங்கோவன், குமார், ஜெய்மாறன், பேரூராட்சி கவுன்சிலர்கள் பபிதா பால்ராஜ், லதாகணேசன், சகாதேவன், கார்த்திக்கோட்டீஸ்வரன், தெய்வானை கபிலன், வினோதினிபாலாஜி, இலக்கியன், கலைவாணிபாபு, கோதண்டராமன், வார்டு செயலாளர்கள் திருமலை, அப்துல்காதர், அரிகிருஷ்ணன், விஜயன், பிரேம்குமார், மகேந்திரன், சுகுமார், ஏழுமலை, நாகராஜ், மதிவாணன், சூரியநாராயணன், திருஞானம், பாலாஜி, பார்த்திபன், அப்துல்சமது, வடிவேல், சுரேஷ், கோதண்டராமன், இளைஞரணி அமைப்பாளர் லெனின்குமார், துணை அமைப்பாளர்கள் கார்த்திக், கிருஷ்ணகுமார், முரளி, கருப்பு ஸ்ரீதர், ரவீந்தர் உள்ளிட்ட பேரூர் கழக அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உறுப்பினர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ், தேமுதிக, விடுதலைச் சிறுத்தைகள், மனித நேய மக்கள் கட்சி, எஸ்டிபிஐ கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக) தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் சிவகங்கை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் PR செந்தில்நாதனை ஆதரித்து, அஇஅதிமுக செய்தித் தொடர்பாளர் சசிரேகா தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.தொகுதியின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து, இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார். அவருக்கு பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் ஆரத்தி எடுத்து உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.இந்த பிரச்சாரம் சிவகங்கை தொகுதியில் தேர்தல் சூழலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

# மானாமதுரையில் அம்பேத்கர் 135வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

மானாமதுரை, ஏப்.16-

இந்திய அரசியலமைப்பின் தந்தை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்தநாளை முன்னிட்டு மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மிளகனூர் கிராமத்தில் நினைவஞ்சலி நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.





இந்த நிகழ்வில், விசிக மாவட்ட பொருளாளர் மு. ஆதிவளவன், அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் இர.பிரபாகரன், முற்போக்கு மாணவர்கழக ஒன்றிய அமைப்பாளர் மூ. சிவாபகத்சிங், சூர்யா, இசையமுதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு, சமூக நீதி மற்றும் சமத்துவத்திற்காக போராடிய அம்பேத்கர் நினைவுகளை போற்றும் வகையில் நடைபெற்றது.

# காளையார்கோவில் கிழக்கு ஒன்றியப்பகுதிகளில் கருணாஸ்க்கு உற்சாக வரவேற்பு

## ஒசெ.வே.ஆரோக்கியசாமி தலைமை

காளையார் கோவில் ஏப்16-

சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் முக்குலத்தோர் புலிப்படை கட்சி நிறுவனர் தலைவர் சேது.கருணாஸ் தொகுதி முழுவதும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்... சிவகங்கை நகர் . தெற்கு. காளையார்கோவில் வடக்கு . உள்ளிட்ட பகுதிகளில் கருணாஸ் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில். நேற்றைய தினம் காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளரும் . காளையார்கோவில் ஒன்றியக்குழு முன்னாள் தலைவருமான வே.ஆரோக்கியசாமி தலைமையில் காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய பகுதிகளான காட்டுப்புலி. ஒய்யவந்தான் . பேச்சாத்தகுடி . உடைகுளம் . வேம்பனி . நேமம் . வளனை .



மாராத்தூர் . மரக்காத்தூர் . நற்கனி . புலிக்கண்மாய் . மருதக்கண்மாய் அம்மாபட்டனம் மாத்துக்கண்மாய் . ஆண்டிச்சியூரணி பள்ளித்தம்மம் . சிலக்கப்பட்டி கல்லுவழி வன்னிக்குடி சிலையாஊரணி . வெள்ளக்குடி . சிறுவேலங்குடி உள்ளிட்ட பகுதிகளில் வேட்பாளர் கருணாஸ் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்...

பகுதி முழுவதும் நல்ல உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது... இதனிடையே வேட்பாளர் கருணாஸ் ஆங்காங்கே அமைந்துள்ள பல்வேறு சர்ச் மற்றும் கோவில்களில் சாமி தரிசனம் மேற்கொண்டார்..இந்த நிகழ்ச்சியின் போது. ஒன்றிய துணைச் செயலாளர் வனிதா கண்ணதாசன் . ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மாராத்தூர் முத்துப்பாண்டியன் . கண்ணதாசன் . துணை அமைப்பாளர்களான தென்றல் நகர் சுரேஷ். உதயநிதி குணா . கிளைச் செயலாளர் மலைராஜ் ரகுவரன் . சிறிய புஷ்பம். ரோஸ்லின் . இளைஞரணி உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர் ...இதனிடையே காளக்கண்மாய் .செவப்புஞ்சை . பள்ளிதம்மம் . சிலையாஊரணி . . உலகூரணி . நெருங்குளம் . கல்லுவழி. மாத்துக்கண்மாய் . ஆகிய பகுதிகளில் மாவட்ட திமுக துணைச் செயலாளரும் . திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவருமான த . சேங்கைமாறன் வேட்பாளர் கருணாஸுடன் இணைந்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்... பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்...

இந்த நிகழ்ச்சியின் போது பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் ரஹமதுல்லாகான் . மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானிகணேசன் . மாவட்டதுணைத் தலைவர்மார்கரேட் கமலாபத்தினாதன். மாவட்டஇளைஞரணி துணைஅமைப்பாளர் கிங்கார்த்திக் . காளையார்கோவில் தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் கோலாந்தி கோதண்டபாணி. கிளைக் கழகச் செயலாளர் ஆர்.வி.எஸ்.அரங்கநாதன் . மாவட்ட பிரதிநிதி ஆர்.எம்.எல்.கருணாநிதி . உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்....



# திருப்பூர் மாவட்டத்தில், வடக்கு தொகுதி சட்டமன்ற வேட்பாளர் எம் எஸ் எம் ஆனந்தன் தீவிர பிரச்சாரம்

திருப்பூர், ஏப்.16-

திருப்பூர் மாவட்டத்தில், வடக்கு தொகுதி சட்டமன்ற வேட்பாளர் எம் எஸ் எம் ஆனந்தன் அஇஅதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களால் நியமிக்கப்பட்டார். இவர் பிறந்து வளர்ந்த ஊரும் திருப்பூர் வடக்கு தொகுதி ஆகும். எல்லா மக்களுக்கும் பரிச்சயமானவர். வடக்கு தொகுதி மக்கள் எந்த நேரத்திலும் குறைகள் இருந்தால் இவரை நேரில் சென்று குறைகளை கூறுவார்கள். உடனடியாக தன் தொகுதி மக்களின் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்யும் வல்லவர். இவர் 2011 இல் அஇஅதிமுக பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவால் திருப்பூர் வடக்கு வேட்பாளராக நியமிக்கப்பட்டவர். எம் எஸ் எம் ஆனந்தன். இவர் அப்போதே திருப்பூர் வடக்கு தொகுதியில். தமிழ்நாட்டிலேயே அதிக ஓட்டுக்களை பெற்றவர். என்பதால் முதல்வர் ஜெயலலிதாவால் பாராட்டுகளை பெற்றவர், மீண்டும் 2026 அ இ அ தி மு க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி திருப்பூர் வடக்கு தொகுதி வேட்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் சூறாவளி சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு. வேலம்பாளையம் தொகுதியில் ஓட்டு சேகரிக்க வேட்பாளர் எம் எஸ் எம் ஆனந்தன். உடன் விஜயகுமார் மற்றும் அ தி மு க மணி. ஆகியோருடன் பட்டத்தரசி அம்மன் கோயிலில் இருந்து புது காலனி வழியாக நாகாத்தம்மன் கோயில் வழியாகவும் சென்று மக்களிடம் ஓட்டு சேகரித்தார் அப்போது பொதுமக்கள் அவருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பெண்கள் பலர் ஆரத்தி எடுத்தனர். அனைத்து மக்களும் அவருக்கு ஆதரவு கொடுத்தனர்.



# திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, சத்தியபாமா தீவிர பிரச்சாரம்

திருப்பூர், ஏப்.16-

திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் கிழக்கு ஒன்றியம், பொம்மநல்லூர் ஊராட்சி வெள்ளைகவுண்டன் வலசு,கொங்கூர் ஊராட்சி தாசவநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் தாராபுரம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் P.சத்தியபாமா அவர்களை ஆதரித்து திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு C.மகேந்திரன் M.A.,MLA. அவர்கள், தீவிரவாக்கு சேகரிப்பு பரப்புரை மேற்கொண்டார்.

உடன் மாவட்ட கழக பொருளாளர் திரு சின்னப்பன், ஒன்றிய கழக செயலாளர்கள் தாராபுரம் கிழக்கு செல்வக்குமார்தாராபுரம் தெற்கு ரமேஷ், சார்பு அணி மாவட்ட செயலாளர் எம்.ஜி.ஆர் இளைஞர் அணி ஆதித்தன், எம்.ஜி.ஆர் இளைஞர் அணி இணை செயலாளர் D.S.சிவகுமார் குண்டடம் முன்னாள் சேர்மன் குப்புசாமி தமிழ் மாநில காங்கிரஸ் கிழக்கு மாவட்ட தலைவர் காளிதாஸ், பி.ஜே.பி மாவட்ட தலைவர் கார்த்தி, கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், மற்றும் தொண்டர்கள் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்



# காரைக்குடி கிராமங்கள்தோறும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் பிரபுவிற்கு உற்சாக வரவேற்பு

## தேர்தல் களம் தீவிரம்!

காரைக்குடி ஏப்.16-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் களம் தற்பொழுது சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. இத்தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் டிகே பிரபு, தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.தீவிர வாக்கு சேகரிப்புவேட்பாளர் டிகே பிரபு, காரைக்குடி தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொண்டார். குறிப்பாக:

* செட்டியேந்தல், செய்யாநேந்தல் * நெம்மேனி, மொன்னி கார்மாங்குடி * பணங்குளம், சேந்தனி, பப்பனி * சிறுவத்தி, செங்கற்கோவில், வெள்ளிக்கட்டி * கோபாலபுரம் (நாகமத்தி), சருகனி * திருவேகம்பத்தூர் மற்றும் முப்பையூர்உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று அவர் வாக்கு சேகரித்தார். பொதுமக்கள் உற்சாக வரவேற்புபிரச்சாரத்தின் போது ஒவ்வொரு கிராமத்திலும் பொதுமக்கள் வேட்பாளர் டிகே பிரபுவிற்கு ஆரத்தி எடுத்தும், மலர் தூவியும் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். இளைஞர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் கட்சிக்குக் கிடைத்து வரும் ஆதரவு தேர்தல் களத்தில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது. கட்சி நிர்வாகிகள் உற்சாகம்இந்த வாகனப் பேரணி மற்றும் பிரச்சாரப் பயணத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர். கிராமப்புறங்களில் கட்சியின் செல்வாக்கு நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகவும், இது வாக்குகளாக மாறும் என்றும் கட்சி நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். தொடர் பிரச்சாரங்களால் காரைக்குடி தொகுதியின் கிராமப்புறப் பகுதிகளில் தேர்தல் களம் தற்பொழுது விறுவிறுப்பான நிலையை எட்டியுள்ளது.

# அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை: திருப்புவனம் பகுதிகளில் தமிழரசி ரவிக்குமார் தீவிர வாக்கு சேகரிப்பு

திருப்புவனம் ஏப்.16-

மானாமதுரை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார், நேற்று (ஏப்ரல் 14)சட்டமேதை அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, திருப்புவனம் கிழக்கு ஒன்றியப் பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட மடப்புரம் குடியிருப்பு பகுதியில் தனது தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கிய அவர், அங்கு வைக்கப்பட்டிருந்த அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்குப் புகழ் வணக்கம் செலுத்தினார். இதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார்.





மக்களிடையே ஆற்றிய உரை:பிரச்சாரத்தின் போது அவர் பேசியதாவது:"சமூக நீதிக்காகப் பாடுபட்ட அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளான உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தத் தொகுதியில் கல்வி மற்றும் அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளேன். மீண்டுமொருமுறை வாய்ப்பளித்தால், உங்கள் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து பாடுபடுவேன்."தோழமை கட்சிகளுடன் விறுவிறுப்பான பிரச்சாரம்:மடப்புரம் குடியிருப்பு பகுதியைத் தொடர்ந்து, மஞ்சள்குடி, தேளி, கணக்கன்குடி, பெத்தானேந்தல், மணல்மேடு, சடங்கி மற்றும் வெங்கட்டி ஆகிய கிராமங்களில் அவர் வாக்கு சேகரித்தார். தோழமை கட்சிகளின் கொடிகளுடனும், உற்சாக முழக்கங்களுடனும் நடைபெற்ற இந்தப் பிரச்சாரத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.தொடர்ந்து கருங்குளம், கானூர், மழவராயனேந்தல், சம்பராயனேந்தல் மற்றும் தூதை ஆகிய பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். வழிநெடுகிலும் அவருக்குப் பொதுமக்கள் மற்றும் பெண்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். மதிய வேளையில் தூதை குடியிருப்பு பகுதியில் முதற்கட்டப் பயணம் நிறைவடைந்தது.இந்த நிகழ்வில் கூட்டணி கட்சிப் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161